# அறிமுகம்

## மார்ட்டினா ப்பிஷர் மற்றும் நோபேர்ட் ரோப்பர்ஸ்

பனிப்போர் யுகத்தின் பின்னர் இருபத்தோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலகில் இடம்பெற்ற வன்செயல் மோதுகைகளின் பரிமாணம் மற்றும் எண்ணிக்கை காரணமாக பிணக்குகளைச் சமாதானமான முறைகளில் முடிவுறுத்தும் ஒரு புதிய கட்டத்தை நோக்கிச் செல்லும் சாத்தியக்கூறு குறித்த நம்பிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. அமெரிக்கா தலைமையிலான ஒருதரப்பு வாதத்துக்கும், கடந்த தசாப்தங்களிலான பல்தரப்பு வாதத்தின் சாதனைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கான பிரயத்தனங்களுக்குமிடையில் ஒரு புதிய உலக ஒழுங்கமைப்பை ஏற்படுத்துவதற்கான போராட்டம் குறித்த சூழமைவில் அரசுகளுக்கிடையிலான மோதுகைகள் கூட நிகழ்ச்சி நிரலில் முக்கியத்துவம் குறைந்திருப்பது போலத் தோன்றுகின்றது. ஆயினும் தற்போதைய வன்செயல் மோதுகைகளுள் பல அரசுகளினுள் இடம்பெறும் சிவில் யுத்தங்கள் அல்லது அரசுகளை உருவாக்குதல் என்பவற்றோடு தொடர்புற்ற மோதுகைகளாகும். இதன் கருத்து அரசாங்கத்தின்மீதான கட்டுப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்குப் பல்வேறு குழுக்கள் போராடுகின்றன, அல்லது அரசாங்கங்கள் பிரதானமாக இனத்துவ அரசியல் ரீதியில் உருவாகிய யாதெனுமொரு குழுவுக்கெதிராகப் போராடுகின்றன என்பதாகும். அரசியல் அதிகாரம், சிவில் உரிமைகள், அடையாளம், பொருளாதார அனுகூலம் அல்லது இயற்கை வளங்களைப் பேணுவது அல்லது புதிதாக ஈட்டிக் கொள்வதென்பது சர்ச்சைக்குரிய பிரச்சினையாகவுள்ளது. சில யுத்தங்கள் அரசுகளினுள் நலிவு மற்றும் உள் மோதல்கள் ஏற்படுவதால் தோன்றுகின்றன. ஏனைய யுத்தங்கள் புதிய அரசுகளை ஏற்படுத்துவதற்காக நிகழுகின்றன. அவற்றுட் பல முழுச் சமுதாயங்களையும் அல்லது பிராந்தியப் பொருளாதாரங்களையும் பாதித்து, நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் யுத்தங்களாகும்.

அரசுகளுக்கிடையிலான மோதுகைகள் பிரதானமாக சர்வதேச முறைமையில் இயங்கும் நிறுவனங்களினுள் கையாளப்பட்டு விவாதிக்கப்படும் அதேவேளையில் அரசுகளினுள் இடம்பெறும் மோதுகைகள் சம்பந்தமான கவனம் புதிய நடைமுறைகளுக்கும், நிறுவனத்தினது மார்க்கங்களுக்கும், புதிய சொல்லாடல்களுக்கும், மோதுகைளுக்கான பதில் நடவடிக்கைகள் துறையில் புதிய பதப்பிரயோகங்களுக்கும் இட்டுச்சென்றுள்ளது. சரியாகக் கூறுவதாயின் இத்துறையுடனேயே மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கான பேர்கோ.ஃவ் கைந்நூல் சம்பந்தமுற்றுள்ளது.

இப்பணிவிடயப்பரப்பும், நடைமுறை மற்றும் எண்ணக்கருச் சிந்தனைகள்குறித்த உரையாடல்களும் எவ்வாறு தம்மைச் சிறப்பான தொழில்சார் தனித்துவத்துடன் கூடிய ஒரு விடயப்பரப்பாக நிலைநிறுத்திக் கொள்ளும் என்பது இனிமேலும் பதிலளிக்கப்படவேண்டிய ஒரு வினாவாகும். ஆயினும் அபிவிருத்திக்கொள்கை மற்றும் செயற்பாடு, மனிதாபிமான உதவி, மனித உரிமைகள், இராஜதந்திரம் மற்றும் சமாதானப்பணி ஆகியவை தொடர்பான துறையிலுள்ள பல நிறுவனங்களும், அமைப்புகளும் இப்பொழுது அரசுகளினுள்ளே காணப்படும் மோதுகைகளுக்குப் பதிற்குறி செயற்பாடுகளிலேயே பெருமளவுக்கு ஈடுபட்டுள்ளமை கண்கூடாகும். அவை நேரம், சக்தி, மனித மற்றும் நிதிவளங்களை முதலீடுசெய்துள்ளதுடன், அவற்றுட் பல இத்துறையிலான தமது நடவடிக்கைகளை ஏற்கனவே நிறுவனமயப்படுத்தியுள்ளன; அல்லது நிறுவனமயப்படுத்தத் தயாராகவுள்ளன.

அரசுகளினுடே காணப்படும் மோதுகைகளுக்குப் பதிற்குறிகளைக் காட்டும் போது இந்த மோதுகைகளினுடே காணப்படும் பொது அம்சங்களைக் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று சகல

கற்றறிவாளர்களும், செயற்பாட்டாளர்களும் கருதுகின்றனர். இரண்டாவதாக, புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் மீளிணக்கம், அபிவிருத்தி மற்றும் அரசு ஆக்கத்துறைகளில் மோதுகைகள் சம்பந்தமான மரபுரிமைவிடயங்களில் பணியாற்றுவதோடு, இணைப்புற்ற யாவற்றையும் உள்ளடக்கும் ஓர் கட்டுக்கோப்பு அவசியமென்று அவர்கள் வாதிடுகின்றனர். மூன்றாவதாக, மோதுகையின் மூலகாரணங்களை இலக்குவைப்பதும், பல வருடகாலமாக இடம்பெற்ற வன்செயல் மற்றும் பகைமையின் தாற்பரியங்களுக்குத் தீர்வுகாண்பதுமான இத்தகைய ஒரு பல்பரிமாண அணுகுமுறை சர்வதேச, தேசிய, பிராந்திய மற்றும் உள்ளூர்போன்ற பல்வேறு மட்டங்களிலான ஊடாட்டங்களின் அடிப்படையில் அமைய வேண்டுமென்ற பரந்த அடிப்படையிலான விளக்கமொன்று உள்ளது. அத்தோடு, அது அரச செயற்பாட்டாளர்களின் தடம்1 நடவடிக்கைகளுக்கு அப்பால் செல்வதோடு, ஒரு பரந்தவகையிலான "பல்தட" பிரயத்தனங்களுக்காகப் அரசு அல்லாத செயற்பாட்டாளர்கள் பலரையும் அணிதிரட்டுவதாக அமைதல்வேண்டும்.

இத்தகைய ஓர் அணுகுமுறையை நடைமுறைப்படுத்துவது இலகுவானதல்லவென்பது கண்கூடாகும். மேலும் ஒவ்வொரு மோது தன்மையில் வேறுபட்டதாகும். ஒரு சூழ்நிலையில் பயனளிக்கக்கூடிய ஒரு லிடயம் வேறொரு சூழ்நிலையில் பொருத்த மற்றதாகும். அரசுகளினுள் இடம்பெறும் முரண்பாடுகளுக்குப் பதிற்குறி நடவடிக்கைகளை எடுப்பது எவ்வாறு என்பதை மேலும் சிறந்த முறையில் புரிந்துகொள்ளும்வகையில் அறிவைப் பரிமாறிக்கொள்வதும், பகிர்ந்துகொள்வதும் அவசியமென்று நாம் நம்புகின்றோம். மொதுகை மாற்றுநிலைப்படுத்தலில் நடைமுறை, அவதானிப்பு மற்றும் கோட்பாட்டு அறிவை சாராம்சப்படுத்துவதற்கான காலம் கனிந்துள்ளதென்று நாமும், பல சகபணியாளர்களும் நம்புகின்றோம். கடந்த சில வருடங்களுள் மோதுகைத் தீர்வு, மூன்றாந் தரப்பு இடையீடு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் சம்பந்தமான பல்வேறு பாடநூல்களும் வெளிக்களக்கைந்நூல்களும், துறைவிசேடத்துவம் கொண்ட கைந்நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.



பேர்கோ.்.வ் கைந்நூல் மோதுகை மாற்றுநிலையாக்கத்துறை மற்றும் சமீபத்திய அபிவிருத்திகள் சம்பந்தமான உள்மையப் பிரச்சினைகள் குறித்துக் கல்விப்புலமைசார் மற்றும் நடைமுறைக் கண்ணோட்டங்களில் ஒரு மேலோட்டமான பார்வையை வழங்குகின்றது. இவை இரண்டினதும் ஒன்றிணைப்பு அறிவுசார்ந்ததும், பயனுறுதியுள்ளதுமான நடைமுறைக்கு ஒரு குறிப்பிட்ட பங்களிப்பை வழங்கும் என்பதிலும் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். பேர்கோ.்.வ் கைந்நூல் நன்கு தாபிக்கப்பட்ட ஒரு துறைச்சீலத்திலான திரட்டப்பட்ட அறிவின் சாராம்சத்தைக்கொண்ட ஒரு பாடநூல் அல்ல. இது நன்கு தாபிக்கபட்ட நடைமுறைகள், எண்ணக்கருக்கள், சிக்கலான பிரச்சினைகள் மற்றும் அறைகூவல்கள் சம்பந்தமான விடயங்களை உற்றுநோக்கி, அவற்றுக்குக் கவனத்தை ஈர்ப்பதற்கான ஒரு முயற்சியாகும். பொ்கொவ் கைந்நூல் தயாரிப்பு வழிமுறைகள்குறித்த ஒரு திரட்டு அல்ல. அது பாவனைக்குத் தயார் நிலையிலுள்ள கருவிகளின் தொகுதியை வழங்கும் ஒன்றல்ல. அதன் நோக்கம் நடைமுறைசம்பந்தமான மாறா ஒழுங்குகளின் கருமங்கள், பலமான அம்சங்கள் மற்றும் பலவீனங்களை மேலும் பூரணமாக விளங்கிக்கொள்ளும் வகையில் அவற்றை ஒரு பரந்த எண்ணக்கருக் கட்டுக்கோப்பினுள் வைப்பதாகும்.

இக்கைந்நூலின் நோக்கம் மோதுகை மாற்றுநிலையாக்கம் சம்பந்தமாகத் தற்போதுள்ள அணுகுமுறைகள், வழி முறைகள், நுட்பங்கள் மற்றும் கோட்பாடுகள்குறித்த ஒரு மேலோட்டமான பார்வையை செயற்பாட்டாளர்களுக்கும், கற்றறிவாளர்களுக்கும் வழங்குவதாகும். அதாவது இத்துறையிலுள்ள "அதி நவீன முறைகளை" ஆவணப்படுத்துவதும், மதிப்பீடு செய்வதும், இந்த அணுகுமுறைகளில் பலமான அம்சங்கள் மற்றும் பலவீனங்கள் குறித்துச் சிந்திப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவதுமாகும். மேலும் மோதுகை சம்பந்தமாக ஈடுபாட்டுடன் பணியாற்றும் தனிநபர்கள் மற்றும் அமைப்புகள் முகங்கொடுக்கவேண்டியுள்ள இருதலைப் பொறிநிலைகளுக்கும் தீர்வுகாணவேண்டியது அவசியமாகும். அத்தோடு பயனுறுதியுள்ளதும், வினைத்திறன்மிக்கதுமான மாற்றுநிலை உத்திகளை இலகுபடுத்தும்வகையிலும், இத்துறையில் சிக்கல்நிலைகளை ஒன்றிணைக்கும்வகையிலும் மேலும்

அர்த்தப்பொதிவுள்ளதும் தத்துவரீதியில் வலுவுள்ளதுமான எண்ணக்கருக்களை அபிவிருத்திசெய்வதையும் ஊக்குவிக்க விரும்புகின்றோம்.

ஆகவே இக்கைந்நூல் பின்வரும் விடயங்களைக் கையாளுகின்றது:

- எண்ணக்கருக்கள், வழிமுறைகள், உபாயங்கள் மற்றும் கைக்கருவிகளை சாராம்சப்படுத்துவதன் மூலம் மோதுகை மாற்று நிலையாக்கத் துறையை முறைமையாக விபரிக்கின்றது;
- மேலோட்டமான பார்வை ஒன்றை வழங்குவதற்கும், தற்போது இத்துறையில் நிலவும் கோட்பாட்டு இடைவெளியை நீக்குவதற்கும் கோட்பாடு சம்பந்தமான தீர்மானகரமான விவாதங்களை ஆய்வுசெய்கின்றது;
- கட்டமைப்புத் திசை மார்க்கம் கொண்ட அணுகுமுறைகளைச் சமாதானத்தை ஏற்படுத்துதல் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் சம்பந்தமான செயல்முறைத் திசை மார்க்கம் கொண்ட முன்முயற்சிகளோடு சமநிலைப்படுத்தும் வழிகளைப் பரிசீலனை செய்கின்றது;
- சர்வதேச அரசசார்பு நிறுவனங்கள், தேசிய அரசாங்கங்கள் அபிவிருத்தி முகவர் நிலையங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகத்தின் ஏனைய செயற்பாட்டாளர்கள் என்போர் உள்ளிட்ட சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் ஈடுபட்டுள்ள பல்வேறு செயற்பாட்டாளர்களின் பாத்திரங்களைப் பகுப்பாய்வு செய்கின்றது;
- இச்செயற்பாட்டாளர்களுக்கிடையிலான கூட்டிணைப்பு மற்றும் வலைப்பின்னல் அமைப்பு உத்திகளைக் கலந்துரையாடுகின்றது;
- கற்றுக்கொண்ட பாடங்கள் மிகச்சிறந்த நடைமுறைகள் மற்றும் மோதுகை மாற்றுநிலையாக்க முயற்சிகளின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதிலான கஷ்டங்கள் என்பவை குறித்துச் சிந்திக்கின்றது.

இத்தகைய பல்லினப் பாங்கான தற்கால அறிவைத் தொகுப்பதென்பது ஓர் இலகுவான, குழப்பமற்ற பணியன்று. நடைமுறைக்கும், ஆராய்ச்சிக்கும், கோட்பாட்டுக்குமிடையில் நிலவும் பலவீனமான உறவுகளே இத்துறையில் எதிர்நோக்கப்படும் பிரதானமான சவால்களாகும். மோதுகை மாற்றுநிலையாக்கம் சம்பந்தமான பல விடயப் பரப்புகளில் தற்போதுள்ள அறிவை எண்ணக்கருவாக்கம் செய்வதிலும் மற்றும் முறைமையாக மதிப்பீடு செய்வதிலும் பாடங்கள், மிகச்சிறந்த நடைமுறைகள் மற்றும் புத்தாக்க சிந்தனை என்பவற்றை இனங்காணுவதிலும் அக்கறை வளர்ந்துவருவதை நாம் காண்கின்றோம். எப்படியாயினும், பேரியல்பு மற்றும் சமூக அரசியல் மட்டங்களில் அவற்றின் தாக்கம் சம்பந்தமாகக் குறித்துரைத்த நடைமுறை நுண்ணியல்பு இடையீடுகளைச் சூழமைவு படுத்துவதற்கான தவறற்ற கோட்பாட்டுச்சட்டங்களை அபிவிருத்திசெய்வதற்கான முயற்சிகள் ஒரு சிலவேயாகும். இப்பொதுவான கோட்பாட்டு இடைவெளியைத் தவிர பல தனிப்பட்ட மோதுகை மாற்றுநிலையாக்க விடயப் பரப்புகளில் “மேலும் செய்தால் நல்லது” என்னும் எளிமையான விதந்துரைப்புக்கு அப்பால் குறித்துரைத்த உபாயங்கள் இல்லாத நிலையே காணப்படுகிறது. ஆகவே பிரத்தியேகமாக நடைமுறைக்கும், முறைமையான சிந்தனை ஆராய்ச்சி மற்றும் கோட்பாட்டுக்கிடையிலான உறவிணைப்பைப் பலப்படுத்துவதற்குப் பங்களிப்பை நல்குவதிலும் நாம் அக்கறைகொண்டுள்ளோம். இத்துறையினுள் இடம்பெறும் செயற்பாடுகளை விபரிப்பதற்கு மோதுகை முகாமைத்துவம், மோதுகை தீர்வு, மோதுகை மாற்றுநிலையாக்கம், மோதுகையைத் தடுத்தல், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் போன்ற பல்வேறு பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. நாம் <u>மோதுகை மாற்றுநிலையாக்கம்</u> என்ற பதமே நிலைபேறான சமாதானம் மற்றும் சமூக நீதி என்பவற்றை முன்னேற்றும் நோக்கில் குழுக்களிடையே இடம்பெறும் மோதுகைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் சகல நடவடிக்கைகளையும் உள்ளடக்குவதாக அமையும் என எண்ணுகின்றோம். இந்த விளக்கத்தினுள் நெருக்கடியைத் தடுக்கும்

கட்டமைப்பு மற்றும் செயல்முறைத் திசைமார்க்கம் கொண்ட முயற்சிகள், குழுக்களுக்கு வலுவுள்ள ஜனசமூகங்களைக் கட்டியெழுப்பும் உத்திகள், மோதுகை முகாமைத்துவம் மற்றும் தீர்வு நடவடிக்கைகள், போருக்குக்குப் பிந்திய சூழ்நிலையில் புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் மற்றும் மீளிணக்க முயற்சிகள் என்பவை அடங்கும்.

கடந்த தசாப்த காலத்தில் சமாதானம்குறித்த ஆராய்ச்சி, சர்வதேச உறவுகள் மற்றும் சர்வதேச நிறுவனங்களினுள் இடம்பெறும் சொல்லாடல்களில் மோதுகைத் தடுப்பு என்னும் எண்ணக்கரு அனைவராலும் பயன்படுத்தப்படும் ஒன்றாகியது. வன்செயல் மோதுகைகளைத் தடுப்பதற்கான அணுகுமுறைகளும், சாதனங்களும் பல நூல்களிலும், கட்டுரைகளிலும் கலந்துரையாடப்பட்டுள்ளன. வன்செயல் மோதுகை இயக்கவியல்குறித்த இலட்சியவகையான எண்ணப்போக்கின் அடிப்படையில் வேறுபாடான முயற்சிகளையும், அணுகுமுறைகளையும் கோரிநிற்கும் மூன்று படிநிலைகளுக்கு ஏற்றவகையில் தடுப்புக்குறித்த ஓர் இயக்கவியல் எண்ணக்கரு பரிணமித்தது.

1. வன்செயல் மோதுகை சூழ்நிலைகள் பரிணமிப்பதைத் தடுக்கும் வகையிலான ***நேரகாலத் தடுப்பு.***
2. ஏற்கனவே நிலவும் வன்செயல் மோதுகை கிடைநிலையாக அல்லது நிலைக்குத்தாகப் பரவுவதை தடுக்கும்வகையிலான ***"கடைசி நிமிடத்தடுப்பு."***
3. போர் நிறுத்தங்கள் மற்றும் சமாதன உடன்படிக்கைகளின் பின்னர் மேலும் வன்செயல்கள் வெடிப்பதைத் தடுக்கும்வகையிலான முரண்பாட்டுக்குப் பிந்திய செயற்பாடுகள்.

மோதுகை மாற்றுநிலையாக்கம் என்னும் எண்ணக்கரு இதேயளவு கவனத்தைப் பெறவில்லை. ஆயினும், மேதுகைத் தடுப்புக்கான பயனுறுதியுள்ள முயற்சிகள் ஒரு முன் நிபந்தனையாக மோதுகை நிலைமாற்றத்தையும் உள்ளடக்க வேண்டுமென்றும் நாம் எண்ணுகின்றோம். இதன் கருத்து மேதுகையில் ஈடுபட்டுள்ள தனிநபர்கள் அல்லது குழுக்களுக்கு மோதுகையின் காரணங்களை ஆக்கபூர்வமாகக் கையாளுவதற்கும், இக்காரணங்களை நீக்குவதற்கு அல்லது வெற்றிகொள்ளுவதற்கு அவசியமான உத்திகளை அபிவிருத்தி செய்துகொள்வதற்கும் உதவிவழங்குதல்வேண்டும். எம்மைப் பொறுத்தவரையில் மோதுகை மாற்றுநிலையாக்கம் என்பது ஒரு பொதுவின, அனைத்தும் அடங்கும் எண்ணக்கருவாகும். அது மேதுகையைக் கையாளும் எதிர்மறையான வழிகளை ஆக்கபூர்வமான வழிகளாக மாற்றும்நோக்கில், நீண்டகாலப்பகுதியில் ஒரு குறிப்பிட்ட மோதுகையின் மூலகாரணங்களுக்குத் தீர்வுகாண்பதன்மூலம் மோதுகையின் பல்வேறு பண்புகளையும், வெளிப்பாடுகளையும் மாற்றமுயலும் செயற்பாடுகளைக் குறிப்பதாகும். மோதுகை மாற்றுநிலையாக்கம் என்னும் எண்ணக்கரு மோதுகையின் கட்டமைப்பு, நடத்தை மற்றும் உளப்பாங்குசார் அம்சங்களை வலியுறுத்துவதாகும். அது "நீதியான சமாதானத்தை" நோக்கிச்செல்லும் செயல்முறை மற்றும் கட்டமைப்பு இரண்டையுமே குறிப்பதாகும்.



மோதுகை மாற்றுநிலையாக்கம் என்ற எண்ணக்கரு பிரத்தியேகமாக "இழுபறியான சமூக மோதுகை" என்று அழைக்கப்படும் ஒரு முன்னோடி மாதிரியான அரசுகளினுள் இடம்பெறும் மேதுகைகளுக்குப் பிரதிவிளைவாக விரிவு படுத்தப்பட்டதாகும். இப்பதம் முதலில் 1970களின் பிற்பகுதியில் எட்வேட் அஸார் அவர்களால் ஆக்கிப் பயன்படுத்தப்பட்டது. அது இப்பொழுது பொதுவான அம்சங்களைக்கொண்ட நீண்டகால இன அரசியல் மோதுகைகளை விபரிப்பதற்குப் பரந்த அளவில் பயன்படுத்தப்படுகின்றது. அவரது கூற்றின்பிரகாரம் அவை நான்கு முக்கிய பண்புகளைக் கொண்டுள்ளன:

- இனக்குழும அடையாளக் குழுக்களுக்கிடையிலான மோதுகைகள். இதில் சமத்துவம், பாதுகாப்பு மற்றும் அரசியல் பங்கேற்பு குறித்த தமது அடிப்படைத்தேவைகள் மதிக்கப்படவில்லை என்று எண்ணும் ஒரு குழுவையேனும் காணலாம்.

- அவை எப்பொழுதும் அரசு சம்பந்தமான அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வது குறித்ததாகவே அமைகின்றன. இது ஓர் அரசாங்கத்துக்கும், அதை எதிர்த்துக் கிளர்ச்சிசெய்யும் கட்சிக்கும் இடையிலான சமச்சீரற்ற ஒரு மோதுகையின் வடிவத்தையே எடுக்கின்றது.
- நிகழ்ச்சிகளின் போக்கைப்பாதிக்கும் பல்வேறுவகையான சர்வதேசத்தொடர்பு இணைப்புக்கள். (உறவுநிலை அரசுகள், நாட்டை விட்டு நீங்கிய மக்கட் பரவல், சர்வதேச தலையீடுகள்) அவற்றின் தன்மையை விளங்கிக்கொள்ளுதல் கடினமாகும்.
- அனேகமான சந்தர்ப்பங்களில் அவை பகைமை உணர்வுக் குழுக்களின்வரலாறுகளில் ஆழமாக வேரூன்றியவை ஆகும்.

இழுபறியான சமூக மோதுகைகள் குறித்த மாற்றுநிலையாக்கத்துக்கான அவசியத்தை வலியுறுத்துவது என்பதன் கருத்து இந்த விளக்கத்தின் நான்கு உள்ளடக்க அம்சங்களுக்கும் தீர்வுகாண்பது என்பதாகும். பல்லின அரசியல் முறைமைகளில் தோன்றும் இனக்குழும கோரிக்கைகளின் சட்டநிலைத்தகவை அங்கீகரிப்பது அவசியமாகும். அதிகாரப்பகிர்வு மற்றும் அரசு சீர்திருத்தம்குறித்த அனைத்தும் அடங்கும் எண்ணக்கருக்களும் அவசியமாகும்.

சர்வதேச செயற்பாட்டாளர்கள் மற்றும் சர்வதேச சமூகத்தின் பாத்திரங்களை முறையாக மதிப்பீடுசெய்வது அவசியம் என்பதோடு வன்செயல் மற்றும் வேதனை நிறைந்த இறந்தகாலம் குறித்த ஏதோ ஒருவகையிலான ஒன்றிணைப்பும் அவசியமாகும். மேலும் மாற்றுநிலையாக்துக்கான அவசியம் நீண்டகால இரத்தம்சிந்தும் மோதுகைகள் உயிர்களைக் காவுகொண்டு, ஜீவனோபாயங்களை அழித்து, அகநிலையமைவுகளையும் சீரழிக்கின்றன என்பதுமட்டுமன்றி, அவை சமூகத்தின் அனைத்தும் உள்ளடங்கும் சமூக மூலதனத்தையும் சீரழிக்கின்றன என்னும் அனுபவத்தின் அடிப்படையில் வலியுறுத்தப்படுகின்றது. ஆகவே, மாற்றுநிலையாக்கம் என்பது நிவாரணம், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் புனர்நிர்மாணம் என்பவற்றையும், மனிதாபிமானத்தை மீளவும் ஏற்படுத்துவது மற்றும் மீளிணக்கம் சம்பந்தமாகப் பணியாற்றுவது என்பவற்றையும் குறிப்பதாகும்.

அனைத்தும் உள்ளடங்கும் இந்த விளக்கம் காரணமாக நாம் பேர்கோ.ஃ.வ் கைந்நூலின் தலையாய எண்ணக்கருவாக மோதுகை மாற்றுநிலையாக்கத்தையே தெரிவுசெய்துள்ளோம்.

தலைப்புக் கட்டமைப்பு மோதுகை மாற்றுநிலையாக்கத்தின் பல்வேறு பரிமாணங்களுக்கு ஏற்றவகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. **முதலாவது பகுதி** மோதுகை முகாமைத்துவ மற்றும் மோதுகைத்தீர்வுபோன்ற ஏனைய அடிப்படை எண்ணக்கருக்களின் சூழமைவில் மோதுகை மாற்றுநிலையாக்கம் என்னும் எண்ணக்கருவைக் கையாளுவதாக அமைந்துள்ளது. மேலும் இப்பகுதி ஊடறுப்பு நிலைச்சவால்கள்மீது கவனம்செலுத்துவதோடு, மோதுகை ஊடாட்டங்கள் குறித்த உள் மையப் பரிமாணங்கள் குறித்த மேலோட்டமான பார்வையையும் வழங்குகின்றது.

***டியெத்தர் செங்காஸ்*** மோதுகையை நாகரீக மயப்படுத்தல் குறித்த கோட்பாட்டு வினாக்களைக் கலந்துரையாடுவதன்மூலம் இப்பகுதியை ஆரம்பித்துவைக்கின்றார். அவர் “காரணம் சார்” அல்லது “ஆக்க பூர்வமான” யுத்த ஒழிப்புவாதத்தை மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கான ஒரு வழிகாட்டல் சிந்தனையாகக் கருதுகின்றார். சிவில் அல்லது சர்வதேச யுத்தம் அராஜகத்தின் விளைவெனில், இதை நிலையான சமாதானத்துக்குப் பங்களிப்புச்செய்யும் ஒரு சமூக அமைப்பினாலேயே மாற்றியமைக்க முடியும். இதைத் தேசிய பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் கட்டியெழுப்புதல்வேண்டும். கட்டுரை ஆசிரியர் ஒரு சிக்கலான சமாதான நிர்மாணக் கட்டமைப்பின் மாதிரியை அபிவிருத்திசெய்துள்ளார் (நாகரீக மயப்படுத்தல் அறுகோணி).இந்த ஆறு ஆக்கக்கூறுகளும் அரசின் வன்முறை அதிகார ஏகபோகம்; 2 சட்டத்தின் ஆட்சி; 3

ஜனநாயகப் பங்கேற்பு; 4 ஆக்கபூர்வமான மோதுகை முகாமைத்துவம்; 5 சமூக நீதியும்; ஒப்புரவும்; 6 ஒருவர்மீது ஒருவர் தங்கிநிற்பதும், கட்டுப்பாட்டைக் கையேற்பதும்.) சாத்திய வளரீதியில் வன்செயல்களைக்கொணரும் அரசியல், சமூக" பொருளாதார, சமூக-கலாசார சூழலின் மோதுகைகளை நாகரீகப்படுத்துவதற்கான அடிப்படைகளாகும். காரணம்சார் போரொழிப்புவாதம் "சமாதானத்தைப்பற்றி சிந்திப்பதற்கும்" மற்றும் "சமாதானத்தை ஆக்குவதற்குமென" சரியான சட்டகத்தைத்தாபிப்பதாக வாதிடும் கட்டுரையாளர் அது தற்போதைய பிரயத்தனங்களுக்கான உணர்வூட்டலை வழங்கும் மூலமாக இருத்தல்வேண்டுமென்றும் தெரிவிக்கின்றார். இதற்கான வழிகாட்டல் கோட்பாடு சமாதானத்தைச் சமாதானத்தின்மூலமே அளவிடமுடியும் என்னும் எண்ணப்போக்காகும். இது 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பவருடங்களில் தோன்றியதும், இப்பொழுது புத்துயிரூட்டப்படவேண்டியதுமான ஒரு கருத்தின் மரபுரிமைப்பண்பாகும்.

***கோர்டுலா ரெயிமான்*** மோதுகை முகாமைத்துவத் துறை சம்பந்தமான பொதுவான மேலோட்டப் பார்வையையும், அதன் அதிநவீனமுறைகுறித்த ஒரு தற்காலிக உரையாக்கத்தையும் வழங்குகிறார். இது ஒருபுறத்தில் இத்துறையின் ஆராய்ச்சி நிகழ்ச்சி நிரல் மற்றும் ஆராய்ச்சி வினாக்கள்குறித்த ஒரு மீள்பார்வையையும் மறுபுறத்தில் கோட்பாடு மற்றும் ஆராய்ச்சிமுறைகள் என்பவற்றின் பாத்திரம்குறித்த பகுப்பாய்வையும் உள்ளடக்குகின்றது கட்டுரையாளர் மூன்று தெளிவான அணுகுமுறைகளை முன்வைக்கின்றார். மோதுகையை முடிவுறுத்தல், மோதுகைத்தீர்வு மற்றும் மோதுகை மாற்றுநிலையாக்கம். அதிமுக்கியத்துவம்வாய்ந்த முடிவுகளுள் ஒன்று மோதுகைத் தீர்வு மற்றும் மோதுகையை முடிவுறுத்தல்சம்பந்தமான எண்ணக்கருக்கள் மிகவும் இழுபறி நிலையிலுள்ள, எளிதில் வசப்படுத்த முடியாத, அரசுகளினுள் இடம்பெறும் மோதுகைகளின் சிக்கல்தன்மைக்கு தீர்வு காண்பதில்லை என்பதாகும். ஆகவே வேறுபட்ட கோட்பாட்டுச்சட்டங்களைச் செயற்பாட்டாளர்களுடனும், உத்திகளுடனும் தொகுத்து ஒன்றிணைப்பது அவசியமாகும். இவ்வனைத்துமடங்கும் துறையிலான கோட்பாடு மற்றும் ஆராய்ச்சிமுறைகளின் பாத்திரம்குறித்த கட்டுரையாளரின் கலந்துரையாடல் ஏன் மற்றும் எந்த அளவுக்கு பண்புசார் விஞ்ஞானம் (பகுப்பாய்வுசெய்யப்படும் விடயத்தின் ஆய்வு) மற்றும் அறிவுக்கோட்பாடு (எவ்வாறு பகுப்பாய்வு செய்யப்படுகின்றது என்பது குறித்த ஆய்வு) என்ற வகையில் இணைவுமுழுமை வழங்கப்படவேண்டும் என்பதை தெளிவாக்குகின்றது.

***ஹரியூ மியால்*** மிக முக்கியமான கோட்பாட்டாளர்களையும், மோதுகை நிலைமாற்ற நடைமுறைவழிகளையும் இனங் காணுகின்றார். அவர் இவற்றை மேதுகைத் தீர்வு மற்றும் மோதுகை முகாமைத்துவக் கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகளிலிருந்து பிரித்தறிய முயலுகின்றார். அதேவேளையில் மோதுகை மாற்றுநிலையாக்கம் இந்த ஆரம்பகால மரபுகளிலிருந்து பெருமளவுக்குப் பயன்பெறுகின்றது என்றும் வாதிடுகின்றார். கட்டுரையாளர் சமகால மோதுகையின் தன்மை தொடர்ந்து மாற்றமுறுவதால் கோட்பாடு மற்றும் நடைமுறைசம்பந்தமான மேலதிக அபிவிருத்திகள் இடம்பெற்றுவருகின்றனவென்றும் முடிவுசெய்கின்றார். உள்நாடுகளில் இடம்பெறலும் ஆயுத மோதல்கள் அதிகரித்தவகையில் உலகரீதியான காரணங்களையும், விளைவுகளையும் கொண்டிருக்கலாம். அத்தோடு, மோதுகை மற்றும் மோதுகையில் இடையீடுகள் இரண்டிலுமே உலகமயமாக்கல் இடம்பெற்றுவருகின்றது. கட்டுரையாளர் பகுப்பாய்வு விடயம் மோதுகையிலிருந்து சூழமைவிலான மோதுகைக்கும், மோதுகை நிலவும் சமூகத்திலிருந்து உலகளாவிய மற்றும் பிராந்திய சூழலுக்கு மாற்றமுற வேண்டுமென்றும் வாதிடுகின்றார். இது இன்னமும் மேற்கத்திய கண்ணோட்டங்களின் மேலாண்மையின் கீழுள்ள கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகளுக்கான பண்பாட்டு சவால்களை உருவாக்குகின்றது. அத்தோடு, பலவந்தம் மற்றும் வன்செயல்பிரயோகம் என்பவை பரந்த அளவில் ஏற்றுக்கொள்ளப்படும் சூழமைவுகளில் அஹிம்சா முறைகளைக் கைக்கொள்ளமுனையும் செயற்பாட்டாளர்களுக்கான ஒழுக்கவியல் சார் வினாக்களையும் எழுப்புகின்றது.

***டயனா பிரான்சிஸ்*** மோதுகை மாற்றுநிலையாக்க அணுகுமுறைகள் அதிகார சமச்சீரின்மைகள், பால்நிலை சமத்துவமின்மைகள் மற்றும் பண்பாட்டு வேறுபாடுகளைக் கையாண்டே தீரவேண்டுமென்பதைச் சுட்டிக் காட்டுகின்றார். இந்த வகைப்பிரிவுகள் நெருக்கமான உறவிணைப்புகளைக் கொண்டுள்ளன. அவற்றை அவதானமாக கவனத்தில் கொள்ளுதல்வேண்டும். பிரத்தியேகமாக மோதுகை இடையீடுகளில் சம்பந்தமுறும் வெளியகச் செயற்பாட்டாளர்கள் இவற்றைக் கவனத்தில்கொள்ளுதல்வேண்டும். கட்டுரையாளர் மேற்கவிவான உலகளாவிய மேலாண்மை பண்பாட்டு அடக்குமுறை மற்றும் சுரண்டலுக்கான சட்டகத்தை வழங்குகின்றதென்றும், இது பெண்களை ஆண்களும், தென்னரைக்கோள நாடுகளை மேற்கு நாடுகளும் அடக்கி ஒடுக்கிச் சுரண்டுவதை உள்ளடக்குமென்றும் வாதிடுகின்றார். குடியேற்ற வாதத்தின் விளைவாக ஏற்பட்ட அதிகாரச்சமச்சீரின்மை பண்பாட்டு வேறுபாடுகளினுள் வெடிபொருட்களை விதைத்துள்ளது. இந்த விடயம்காரணமாக அதைக் கையாளுவது பெரிதும் கடினமான ஒரு விடயமாகியுள்ளது. பால்நிலை என்பது பண்பாட்டினால் உருவாகும் ஒரு விடயமாகும். பெண்களுக்கெதிரான அடக்குமுறை அனேகமான சந்தர்ப்பங்களில் பண்பாட்டைக் காரணம்காட்டியே நியாயப்படுத்தப்படுவதோடு, பெண்களின் விடுதலையென்பது ஒரு மேற்கத்திய செய்திட்டமாகவும் காண்பிக்கப்படுகின்றது. எப்படியாயினும், அடக்குமுறைப் பால்நிலை உறவுகளுக்கும், கருத்துநிலைகளுக்கும் தீர்வுகாணப்படவேண்டும் என்பதோடு, மோதுகைக்கு பங்களிப்பு வழங்கும் குறித்துரைப்பான பால்நிலைப் பாத்திரங்களும், படிமங்களும் பகுப்பாய்வு செய்யப்படவும்வேண்டும். பெண்களினதும், பொதுவாக ஒரங்கட்டப்பட்ட குழுக்களினதும் விடுதலை அடிப்படையான பண்பாட்டு மாற்றத்துக்கு உணர்வூட்டுவதும், மோதுகை மாற்றுநிலையாக்கம் குறிக்கும் அடிப்படைக் பண்பாட்டு மாற்றத்தின் விளைவாக எழுவதுமாகுமென்று கட்டுரையாளர் வாதிக்கின்றார். இந்த நோக்கத்தோடு மோதுகையில் இடையீடுசெய்வோர் தமது விழுமியங்கள் மற்றும் இலட்சியங்கள் சம்பந்தமாக வெளிப்படைத்தன்மையைக் காட்டுவதோடு, அதைத் தமது சொந்த அமைப்புகளினுள்ளும் நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.



***இரண்டாவது பகுதி*** மோதுகைகளைப் பகுப்பாய்வுசெய்வதற்கும், முன்னறிவிப்பு செய்வதற்குமான கைக்கருவிகளை மீளாய்வுசெய்வதோடு, மோதுகை மீதான இடையீடுகளின் தாக்கத்தை எவ்வாறு மதிப்பீடு செய்வது என்பதுசம்பந்தமான தற்போதைய விவாதத்தையும் சுட்டிக்காட்டுகின்றது.

***டான் சிமித்*** 20ஆம் நூற்றாண்டின் முடிவிலும், 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலுமான ஆயுதமோதல்களுக்கான காரணங்கள்குறித்த தற்போதைய தேடல்முடிவுகளின் மேலோட்டமான பார்வை ஒன்றை வழங்குகின்றார். மோதுகைகளைப் பகுப்பாய்வு செய்கையில் பரவல் சாத்தியவளங்களுக்கான அறிகுறிகளை எங்கே தேடுவது என்பதுசம்பந்தமாகவும், வன்செயல் பரலுதலைத் தடுப்பதற்கான வாய்ப்புகளை எங்கே தேடுவது என்பது சம்பந்தமாகவும் வலியுறுத்தல் இடம்பெற்றுள்ளது. பின்னர் கட்டுரையாளர் முறையியலைப்பற்றிக் கூறுவதற்குமுன்னர் இவ்விடயப் பரப்பிலுள்ள கோட்பாட்டு அறிவின் நிலை குறித்துக் கலந்துரையாடுகின்றார். இதில் அவர் ஆயுதமோதல் குறித்த ஆய்வு மற்றும் பகுப்பாய்வு சம்பந்தமாக பிரயோக அணுகுமுறை நோக்கியும், கோட்பாட்டு அணுகுமுறையிலிருந்து விலகியும் செல்லுகின்றார். பின்புல மற்றும் உடனடிக் காரணங்களுக்கிடையிலான இடைத் தாக்கங்கள்குறித்தும் வலியுறுத்தல் இடம்பெறுகின்றது. ஆயுதமோதல்களின் காரணங்களை விளக்குவதற்கு அநீதியும், அணிதிரட்டலும் முக்கிய எண்ணக்கருக்களாக மாறுகின்றன இதை விளக்குவதற்கு கட்டுரையாளர் ஓர் உதாரணத்தை வழங்குகின்றார். முன்னாள் யுகோஸ்லாவியாவின் சீரழிவுகாலத்தில் கண்டுணரப்பட்ட அநீதிகளின் முக்கியத்துவமும், மோதுகையை நோக்கிய அரசியல் அணிதிரட்டலுக்கான விடயங்களாக இத்தகைய அநீதியும், அடையாளமும் பயன்பட்டமையுமே அந்த உதாரணமாகும்.

***அலெக்ஸ் ஒஸ்டின்*** நேரகால எச்சரிக்கை நடவடிக்கைகளுக்கான அறிமுகம் ஒன்றை வழங்குகின்றார். கட்டுரையாளர் நேரகால எச்சரிக்கை முறைமைகள் பின்வரும் விடயங்களை சாதிக்கமுடியுமா என்பதுகுறித்து விமர்சனக் கண்ணோட்டத்துடன் நோக்குகின்றார்: (a) மோதுகையின்

காரணங்களை இனங்காணுதல், (b) மோதுகை வெடிப்பதை முன்கூறுதல் மற்றும் (c) மோதுகையின் தீவிரத்தைத் தணித்தல். நேர கால எச்சரிக்கை முறைமை மோதுகையின் தீவிரத்தைத் தணிப்பதற்கான ஒரு பொறிமுறையைக் கொண்டிராவிடின், தற்போதைய மாதிரிகளின் துல்லிய தன்மையைச் சீரமைப்பதில் எவ்வித பயனும் கிட்டமாட்டாதென்று அவர் தெரிவிக்கின்றார். இக்கட்டுரை நேரகால எச்சரிக்கைத்துறையில் அதிநவீன முறைகள்குறித்துக் கூறுவதோடு பல்வேறு கவனக் குவிப்பு விடயப்பரப்புகள், முறையியல்கள் மற்றும் பயன்படுத்தப்படும் பொறிமுறைகள் என்பவற்றையும் இனங்காணுகின்றது. அது நேரகால எச்சரிக்கைக்காக இப்பொறிமுறைகளை ஒரு மாதிரிமாகச் சாராம்சப் படுத்துவதோடு, நேரகால எச்சரிக்கையிலிருந்து நேரகால பதில் நடவடிக்கைக்கான இடைமாற்றத்தை எதிர்நோக்கும் பாரிய சவால்கள்குறித்தும் தெரிவித்து நிறைவடைகின்றது.

***தானியா பவென்ஹெறால்ஸ்*** இடையீட்டு உத்திகளை வடிவமைத்து மதிப்பீடுசெய்தல்குறித்த எண்ணக்கருக்களையும், அனுபவங்களையும் சுருக்க விளக்கமாகத் தெரிவிக்கின்றார். இக்கட்டுரையில் ஏதாவது குறிப்பிட்ட மோதுகைச் சூழ்நிலையில் எந்தநேரத்தில், எத்தகைய உத்திகளுடனும், சாதானங்களுடனும் எந்தச் செயற்பாட்டாளர் இடையீடு செய்யலாம் என்னும் வினாக்கள் சம்பந்தமாக எழும் பிரச்சினைகளைக் கலந்துரையாடுகின்றார். தாம் பெற்றுக்கொண்ட வெளிக்கள அனுபவத்திலிருந்து கட்டுரையாளர்இடையீட்டு வடிவமைப்பின்போது தீர்வுகாணப்படவேண்டிய 10 பிரச்சினைகளை வகுத்தமைக்கின்றார்: 1. இலட்சிய தரிசனம், குறியிலக்குகள் மற்றும் அர்ப்பணிப்புணர்வுக்கான தேவை: 2. மோதுகைகளையும் செயற்பாட்டாளர்களையும் பகுப்பாய்வுசெய்யும் முறைகள்: 3.இடையீடுசெய்யும் செயற்பாட்டாளர்களின் உத்திகளும், பாத்திரங்களும்: 4. போதிய எண்ணிக்கையிலான பங்காளர்களையும், பிரவேசத்தானங்களையும் தேடும் தொடர்முயற்சி: 5. காலத்தை நிர்ணயிப்பதும், இடையீடுகளிலிருந்து வெளியேறும் விருப்புத்தெரிவுகளும்: 6. செயல்முறைகள் மற்றும் கட்டமைப்புக்களை உருவாக்குதல்குறித்துச் சிந்தித்தல்: 7. வெளிக்களப் பதவியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அளவுகோல்கள்: 8. கூட்டிணைப்பும், ஓத்துழைப்பும்: 9. நிலைபேற்றுத்தன்மைசம்பந்தமான இலட்சியங்களை உள்ளடக்குதல் .இவற்றுடன்10. இடையீட்டு செயல்முறையினுள் கற்றலையும் ஒன்றிணைத்தல்: இந்த அம்சங்கள் மோதுகையால் அரசசார்பற்ற நிறுவனங்களின் யதார்த்தநிலைகுறித்த கண்ணோட்டத்திலிருந்து பரிசீலிக்கப்படுகின்றமை கட்டுரையாளர் இறுதியாக அமைப்புகளினுள்ளும், நிகழ்ச்சித் திட்டங்களினுள்ளும் அறிவை முகாமைத்துவம்செய்யும் பொறிமுறைகளை உருவாக்குவதிலுள்ள கஷ்டங்கள் குறித்து இறுதியாக உரையாடுகின்றார்.

***மார்க் ஹொவ்மன்*** மூன்றுவகையான கண்ணோட்டங்களிலிருந்து சமாதானம் மற்றும் மோதுகைத்தாக்க மதிப்பீடு (PCIA) முறையியலைக் கவனத்தில்கொள்வதன்மூலம் மதிப்பீட்டில் அதிநவீன முறைகளை மீள்பார்வை செய்கின்றார்: மரபுரீதியான கொடைவழங்குனர் மதிப்பீடுகள், அபிவிருத்திப்பணியில் மதிப்பீடு குறித்த முறையியல்கள் மற்றும் மோதுகைத்தீர்வு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் அ.சா.நிறுவனங் மீது கவனம்செலுத்தும் மதிப்பீடுகள். இக்கட்டுரை (PCIA) முறையியல் குறித்த நடைமுறைசார் தாற்பரியங்களைச் சுருக்கமாக விளக்கி, திறந்த வினாக்கள், பிரச்சினைகள் மற்றும் முன்செல்வதற்கான வழிகளை இனங்கண்டு நிறைவடைகின்றது. இவை பொதுவான அல்லது குறித்துரைப்பான சுட்டிகளின் பயன்பாடு, பல்வேறு மதிப்பீட்டுவகைகளின் இடையிலான இடைத்தொடர்பு, சூழமைவுபடுத்தல் மற்றும் இறுதியாகப் பல்வேறு துறைகளுக்கிடையிலான பரஸ்பர உறவுகள் என்பவற்றைச் சுற்றிச்சுழலும் விடயங்களாகும்.

***மேரி பீ.அன்டேர்சன்*** மனிதாபிமான உதவி, அபிவிருத்தி உதவி மற்றும் / அல்லது சமாதான செயல்முறைகளுக்கு ஆதரவு என்பவற்றை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கைகளைப் பொறுப்பேற்கும் சர்வதேச முகவர்நிலையங்கள் எவ்வாறு அவற்றின் தாக்கங்களைத் தீர்மானிக்கமுடியும் என்பதை எடுத்துக்கூறுகின்றார். இந்த அத்தியாயம் வெளிபுற முகவர்நிலையங்கள் தாம் பணியாற்றும் சமூகங்களினுள்

நிலவும் மோதுகைகள்மீது தாம் ஏற்படுத்தும் தாக்கங்கள்குறித்து மேலும் கூடுதலாக அறிந்துகொள்ளும்வகையிலான கூட்டு முயற்சிகள்பற்றிப் பேசுகின்றது. இவ்வத்தியாயத்தின் ஒரு பகுதி சமாதான செய்திட்டத்துக்கான உள்ளூர் ஆற்றுதிறன் (LCPP) குறித்துக் கவனம் செலுத்துகையில், வேறொரு பகுதி அவரின் அமைப்பாகிய அபிவிருத்தி நடவடிக்கைக்கான கூட்டமைப்பு (CDA) மற்றும் சுவீடனின் வாழ்க்கை மற்றும் சமாதானத்திற்கான நிறுவகம் என்பவற்றால் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட சமாதான நடவடிக்கைக் செய்திட்டத்தின் (RPP) மீதான சமீபத்திய தேடல் முடிவுகளைக் கலந்துரையாடுகின்றது. கட்டுரையாளரின் கூற்றின்பிரகாரம் மோதுகையைக் குறைப்பதற்கான தலையீடுகளைத் தேடுவதும், மதிப்பீடு செய்வதும் இரண்டு பிரதான சவால்களை எதிர்நோக்கவேண்டிய நிலை உள்ளது: முதலாவதாக, முன்னேற்றத்தை மதிப்பீடுசெய்வதற்கான அளவுகோல்களை அல்லது காட்டிகளை இனங்காணுதல். (இது மோதுகை மாற்றுநிலையாக்கம் தொடர்பில் அளவீடுசெய்வதற்கான பொருத்தமான வடிவங்கள் மற்றும் வழிவகைகள்குறித்த கேள்விசம்பந்தப்பட்ட ஒன்றாகும்). இரண்டாவதாக, காரணிகளைத் தீர்மானிப்பதாகும். ஒரு சிக்கலான சூழலில் பல்வேறு விடயங்கள் இடம்பெறும்போது எந்த நடவடிக்கைகள் எந்த விளைவுகளை ஏற்படுத்துமென்று ஒருவர் அறிந்துகொள்வது எவ்வாறு? கட்டுரையாளர் ஒரு தெளிவான செய்தியை வழங்கி கட்டுரையை நிறைவு செய்கின்றார்: உதவிப் பணியாளர்களும், சமாதானப் பணியில் ஈடுபடுவோரும் தமது நிகழ்ச்சித்திட்டங்களில் "தீங்கு விளைவிக்காதிருப்பது" மாத்திரம் போதாது. அவர்கள் தமது பணியில் தாக்க மதிப்பீட்டை ஒரு பிரிக்கமுடியாத பகுதியாக இணைத்துக்கொள்ளுதல் வேண்டும். அவர்கள் தமது பலவருடகாலப் பணியின் அனுபவத்தைப் பயன்படுத்தி, தமது செயல்திறனை அதிகரித்து, வன்செயலில் ஈடுபடாமல் தமது கருத்து வேறுபாடுகளை தீர்த்துக் கொள்ளும் நீதியான சமூகங்களை உருவாக்கமுடியும்.

கைந்நூலின் ***மூன்றாவது பகுதி*** தனிநபர் உறவுகள் மட்டத்திலும், குழுக்களின் உறவுகள் மட்டத்திலும் மோதுகைகளைக் கையாண்டு, அவற்றில் இடையீடுகளை செய்வதற்கான ஆற்றுதிறனை அதிகரிக்கும் நடவடிக்கைகள் குறித்துப் பேசுகின்றது. இப்பகுதி மோதுகை மாற்றுநிலையாக்கத்தின் உளவியல் சமூகப் பரிமாணத்திலும், தனிநபர் மற்றும் கூட்டுக்கற்கை செயல்முறைகளிலும் கவனம் செலுத்துகின்றது.

***ரொன் கிரேபில்*** குழுக்களின் இடையிலான மோதுகைகளை மாற்றுநிலையாக்கம் செய்வதுசம்பந்தமாகத் தனிநபர் மட்டத்திலும் மற்றும் தனிநபர்களிடையிலான உறவுகள்மட்டத்திலும் ஆற்றுதிறனை அதிகரிப்பதை இலகுபடுத்துவதற்கு அவசியமான அதிமுக்கியத்துவம் வாய்ந்த திறன்கள் மற்றும் கைக்கருவிகளை விபரிக்கின்றார். கட்டுரையாளர் இத்தொடர்பாடல் திறன்களுக்கும், கைக்கருவிகளுக்கும் மாற்றுநிலையாக்கத்திறனை வழங்குவது எது என்னும் வினாவை ஆய்வுசெய்கின்றார். பின்னர் மூன்று வகைப்பாடுகள் இலகுபடுத்தல் கைக்கருவிகளை மீளாய்வுக்கு உட்படுத்துகின்றார்: கணத்துக்குக் கணம் சம்பந்தமுற்ற தரப்பினரிடையே இடம்பெறும் ஊடாட்டங்களில் பயன்படுத்தப்படும் திறன்கள் நிலைபேறான சொல்லாடலை இலகுபடுத்தும் தொழில்நுட்பங்கள் மற்றும் மோதுகைகளின் பாரிய நிறுவனரீதியான மற்றும் கட்டமைப்பு யதார்த்தங்களைக் கையாளுவதற்கான செய்முறை வடிவமைப்பு சம்பந்தமான கோட்பாடுகள். கட்டுரையாளர் இந்த மூன்று வகைப்பிரிவுகளிலும் சம்பந்தமுற்ற திறன்கள் மற்றும் தொழில்நுட்பங்களின் மையத்திலுள்ளது "தனக்கு வலுவூட்டல் மற்றும் ஏனையோருடன் உறவுகளைக் கட்டியெழுப்புதல்" குறித்த மாற்றுநிலையாக்கத்துக்கான இரட்டைக் கவனமேயென்று முடிவு செய்கின்றார்.

***பிரெட்ரிச் கிளாஸில்*** மற்றும் ***ரூடி போஸ்ரீ*** என்போர் குழுக்கள் மற்றும் அமைப்புகளிடையே மோதுகை நிலை மாற்றத்துக்கான அணுகுமுறைகளைக் கையாளுகின்றனர். கட்டுரையாளர்கள் குழுக்களின் இடையே ஐந்து மட்டங்களிலான ஒத்துழைப்பை இனங்காணுகின்றனர்: தனிப்பட்ட அங்கத்தினர் மட்டம், உள்ளடக்க மட்டம், இடையீட்டு மட்டம், நடவடிக்கைமுறை மட்டம் மற்றும் குழுவுக்கும் அதன்

சூழக்குமிடையிலான வெளியக உறவுகளைத் தீர்மானிக்கும் மட்டம். கட்டுரையாளர்கள் இவ்வனைத்து மட்டங்களிலும் குழுக்களினுள் நிலவும் மோதுகைகளைக் கையாளுவதற்கான அணுகுமுறைகளை வழங்குகின்றனர். பிரத்தியேகமாக, அவர்கள் தனிநபர்களின் வகிபாகங்ங்கள் மற்றும் குழுத் தீர்மானங்களை மேற்கொள்ளும் வழிமுறைகள்சம்பந்தமான மீள் சிந்தனை மற்றும் குழுவின் அபிவிருத்தி மட்டத்தைச் சரியாகத் தீர்மானிப்பதுசம்பந்தமான ஆலோசனைகளை முன்வைக்கின்றனர். கட்டுரையாளர்களின் கூற்றின்பிரகாரம் குழுக்களுக்கு மோதுகைச் சாத்தியவளங்கள் மற்றும் மோதுகை முகாமைத்துவத்துக்கான சந்தர்ப்பங்கள்குறித்து விளங்கிக்கொள்வதற்கு உதவி வழங்கப்பட்டால் அவர்கள் மோதுகைகளை ஆரம்பத்திலேயே இனங்கண்டு அவற்றை ஆக்கபூர்வமாக அணுகும் இயலுமையைப் பெற்றுக்கொள்வர்.

**நோபேர்ட் ரோப்பர்ஸ்** சொல்லாடல்கள் மோதுகைகளை ஆக்கபூர்வமாகக் கையாளும் மிகச்சிறந்த வழிகள் என்னும் ஆழமான நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றார். இது “நீங்கள் பேசிக்கொண்டிருக்கும் வரையில் துப்பாக்கிச்சூட்டில் ஈடுபடமுடியாது” என்னும் ஜனரஞ்சகமான நம்பிக்கையுடன் இயைபுற்ற ஒரு விடயமாகும். அதி உன்னத இராஜதந்திரத்துறையில் பேச்சுவார்த்தைத்திறன்கள் மற்றும் சொல்லாடல் என்பவை நீண்டகாலமாகவே சர்வதேச உறவுகளை எச்சரிக்கையாகக் கையாளுவது சம்பந்தமான அடிப்படை விடயங்களின் ஒரு பகுதியாக இருந்துவந்துள்ளன. ஆயினும் அதிகார அரசியலின் நிர்ப்பந்தங்கள் காரணமாக உத்தியோகபூர்வ தட இராஜதந்திரப் பிரதிநிதிகள் தொடர்பாடலையும், நேரடிப்பேச்சுவார்த்தைகளையும் மற்றும் பரஸ்பர புரிந்துணர்வையும் முக்கியமாகக் கருதுகின்றனர். அனேகமாக சமூகங்களினுள் இனக்குழும பின்னணிகளுள் இடம்பெறும் ஆயுதந்தரித்த அல்லது வன்செயல் சாத்தியம்கொண்ட மோதுகைகளை முடிவுறுத்துவதற்குச் செல்வாக்குச் செலுத்தும் அல்லது பங்களிப்புச் செய்யும்வகையில் வடிவமைக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான சொல்லாடல் செய்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுவருகின்றன. இச் செய்திட்டங்களுள் பல மூன்றாந்தரப்பு இடையீடுகள் என்றவகையில் வெளிவாரி செயற்பாட்டாளர்களாலேயே பெரிதும் முன்னோக்கிச் செலுத்தப்படுகின்றன. கட்டுரையாளர் மிகச்சிறந்தவகையிலான சொல்லாடல்கள் குறித்த மேலோட்டமான ஒரு கருத்தை வழங்குவதோடு, அனேகமான சொல்லாடல் செயல்முறைகளின் அடிப்படை அம்சங்களையும் இனங்காணுகின்றார். அவர் வெற்றியை அளவீடுசெய்யும் அளவுகோல்களை உருவாக்கும்வகையில் மோதுகையைக் கையாளுவதற்கான பல்வேறு அணுகுமுறைகள்குறித்த சூழமைவில் சொல்லாடல் பற்றிக் கலந்துரையாடுகின்றார். சமாதானத்தை நேசிக்கும் மக்கட்தொகையினரை உருவாக்கும்வகையில் ஓர் சொல்லாடல் செய்திட்டம் வழங்கக்கூடிய மிகமுக்கியமான எண்ணக்கரு ரீதியான பங்களிப்பு அரசியல் பண்பாட்டின் ஓர் அடிப்படை நெறி உதாரணமாக (Paradigm) மாறக்கூடிய சொல்லாடல் அடிப்படையிலான பிணக்கு பண்பாட்டை முன்னேற்றுவதாகும் என்று அவர் முடிவுசெய்கின்றார்.



***நான்காவது பகுதியில்*** பங்களிப்புச் செய்தோர் கட்டமைப்புச் சீர்திருத்தங்கள், நிறுவனங்களைக் கட்டியெழுப்புதல் மற்றும் வன்செயலைக் கட்டுப்படுத்துதல் என்பவை மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கும், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அவசியமான முன் நிபந்தனைகள் என்று தெரிவிக்கின்றனர். கட்டுரையாளர்கள் அரச மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் பிரதான அணுகுமுறைகள்குறித்த மேலோட்டமான பார்வையொன்றையும் வழங்குகின்றனர்.

***குந்தெர் பாச்லெர்*** யுத்தத்தால் பெரிதும் பாதிப்புற்ற பிரதேசங்களை மாற்றுநிலையாக்கம் செய்வதில் அரசு சீர்திருத்தத்தின் முக்கியத்துவம் குறித்து ஆராய்கின்றார். விசேடமாக, பலவீனமான அரசுகளைப் பொறுத்தவரையில் சமாதானமான மோதுகைத்தீர்வு மற்றும் ஜனநாயக அபிவிருத்தி என்பவற்றுக்கு அரசு சீரமைப்பு என்பது ஒரு முன் தேவையாகும் என்றும், சில பாதுகாப்பு “தீவுகளையாவது” தாபிக்கும் முயற்சியில் மக்களை ஈடுபடுத்த வேண்டிய தேவை உள்ளது என்றும் வாதிடுகின்றார். கட்டுரையாளர் அரச சீரமைப்பு மற்றும் மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கான மூன்று உபாய அணுகுமுறைகளை வழங்குகின்றார். முதலாவது, சமூக மற்றும் அரசியல் ஸ்திர நிலையை அதிகரிக்கக்

கூடிய பங்கேற்பு உபாயங்களை உள்ளடக்குவதாகும். (ஜனநாயகமயப்படுத்தல், சிவில் சமூகத்தை வலுப்படுத்துதல், சொல்லாடல் திசைமார்க்கம்கொண்ட அணுகுமுறைகள்) இரண்டாவது, மேலும் வலுமிக்க சமூக இழைமானத்துக்குப் பங்களிப்புச்செய்யும் சகலவடிவங்களிலுமான நிறுவனங்களைக் கட்டியெழுப்புதல் மற்றும் நிறுவன சீர்திருத்தம் என்பவற்றை உள்ளடக்கும் அணுகுமுறையாகும் (சமஷ்டி மயப்படுத்துதல், அதிகாரப் பரவலாக்கம், அரசியல் அமைப்பு மற்றும் நீதி முறைமை). மூன்றாவது அணுகுமுறை பாதுகாப்புத்தேவைகள் மற்றும் கோரிக்கைகளைக் கையாளுவதாகும் (மனித உரிமைகள், மனிதப் பாதுகாப்பு மற்றும் கோரிக்கைகளைக் கையாளுவதாகும் (மனித உரிமைகள், மனிதப் பாதுகாப்பு மற்றும் இராணுவ அச்சுறுத்தல்கள் இல்லாதநிலை). கட்டுரையாளர் முடிவுசெய்வதுபோன்று நிலையான சமாதானத்துக்கு ஜனநாயகம் ஓர் இன்றியமையாத முன்நிபந்தனை என்பது குறித்துக் கற்றறிவாளர்களிடையே பரந்த அளவிலான உடன்பாடு காணப்படுகின்றது. விவாதம் இந்தச் சூழ்நிலை போதுமா என்பதையும், சமூகத்தில் வன்செயலைத் தடுக்கக் கூடிய அரசியல் அமைப்பை நிலைநாட்டும்வகையில் வேறு எக்காரணிகள் ஒன்றிணைக்கப்படவேண்டும் என்பதையும் சுற்றிச்சுழல்கின்றது. பெரும் எண்ணிக்கையிலான திறந்த கோட்பாட்டு வினாக்கள் எஞ்சியுள்ளன. “ஜனநாயக சமாதானம்” என்னும் விடயம் ஒன்று உள்ளதா? அப்படியானால் அதற்கு அவசியமான முக்கிய காரணிகள் எவை? ஒரு சமூகத்தில் தீவிர இடைமாற்றம் அல்லது துரித மாற்றங்கள் இடம்பெறும்வேளைகளில் ஒரு “பிணக்கு பாண்பாட்டை” நிலைநாட்டுவது எவ்வாறு?

***விப்கி ஹான்சன், ஒலிவர் ரம்ஸ் பொதாம்,*** மற்றும் ***ரொம் வூட்வுஸ் என்போர்*** வன்செயல் கட்டுப்பாட்டுக்கும், சமாதானத்தைக் கட்டியெழுப்பும் ஆற்றுதிறன்களை அதிகரிப்பதற்கும் சமாதானத்தைப்பேணுவது முக்கியமானதென்று தெரிவிக்கின்றனர். கட்டுரையாளர்கள் சமாதானத்தைப்பேணும் நடைமுறை போதியளவு சீர்த்திருத்தப்படும் வரை அது ஒரு முக்கியமான சாதனமாகப் பயன்படமுடியுமென்று வாதிடுகின்றனர். மாற்றமுறும் மோதுகைச் சூழல்களுக்குப் பிரதிவிளைவாக சமாதானத்தைக் கட்டியெழுப்பும் ஆற்றுதிறனை வலுப்படுத்தும் அதேவேளையில் பிரதானமாக நடைமுறைப்படுத்தல் அதிகாரங்களை வலுப்படுத்துவதையும் வலியுறுத்துகின்றனர். புதிய கோட்பாடு வன்செயலைக் கட்டுப்படுத்துதல் மற்றும் சமகாலத்தில் சம்மதத்தைப் பேணி ஒத்துழைப்பு உறவுகளைக் கட்டியெழுப்புதல் என்னும் இரட்டை இலட்சியத்தைக் கொண்டதாகும். கட்டுரையாளர்களின் கூற்றின் பிரகாரம் கல்விப் புலமைத்துறையில் தற்போது அபிவிருத்தியுற்றுவரும் அணுகுமுறைகள் சமாதானத்தைப் பேணும் நடைமுறையுடன் பூரணமாக ஒன்றிணைக்கப்பட்டால் மாத்திரமே இந்த இரட்டை இலட்சியத்தை ஈட்டிக்கொள்ள முடியும். மேலும் இக்கட்டுரை மோதுகைத்தீர்வுக் கோட்பாட்டில் அபிவிருத்தியுறும் அறிவு எவ்விடத்தில் சமாதானத்தைக் கட்டிக்காப்போருக்கு இயைபுள்ளதாக அமைகின்றது என்பதைத் தெரிவிப்பதோடு, பிரயோகத்துக்கான கண்ணோட்டங்கள் குறித்துக் கருத்துத்தெரிவித்து, சமாதானத்தைப் பேணுவது சம்பந்தமான எதிர்காலத் தேவைகள்குறித்த வினாவுக்கும் தீர்வுகளை முன்வைக்கின்றது.

***துசான் ரெல்ஜிக்*** இனக்குழும அரசியல் மோதுகைகளின் மாற்றுநிலையாக்கத்தில் செய்தி ஊடகங்களின் வகிபாகத்தைப் பகுப்பாய்வுசெய்கின்றார். செய்தி ஊடகங்கள் எப்பொழுதும் தேசிய அடையாளங்களின் அமைப்பியலுக்குப் பங்களிப்புச்செய்கின்றன. இனக்குழும ரீதியில் பிளவுண்ட சமூகங்களில் ஊடகங்களில் விடயங்கள் வெளிவருவது உள்ளடக்கப்படாமை குறித்த உணர்வுகளுக்கு வலுவூட்டி, அதன்மூலம் இனக்குழும குழுக்களிடையே எதிர்மறையான தொடர்பாடல் திருகுசுருள் தாக்கங்களை ஏற்படுத்தி, இறுதியாக வன்செயல்களுக்கு இட்டுச் செல்லும். கட்டுரையாளர் சமாதானத்தை முன்னெடுக்கும்வகையில் இனக்குழும அரசியல் மோதுகைகள் குறித்து அறிக்கையிடும் விருப்புத்தெரிவுகளைப்பற்றிச் சமாதான ஆய்வாளர்களும், பத்திரிகையாளர்களும் முன்வைக்கும் சில ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கின்றார். பிரதானமாக, செய்தி ஊடகங்கள் எப்பொழுதும் அதிகாரிகளின் ஒரு கைக்கருவியாகச் செயற்படுவதால், நடைமுறையில் பத்திகையாளர்களுக்கு மோதுகைகளின்

விளைவுகள்மீது ஆக்கபூர்வமாகச் செல்வாக்குச்செலுத்தும் சந்தர்ப்பம் மிகவும் குறைவானதாகும். எப்படியாயினும், அவர் ஊடகங்களின் தாக்கத்தை விளக்குவதற்கு வடிவமைக்கப்பட்ட ஓர் அடிப்படை மாதிரியை வழங்குகின்றார். அது ஒரு சமூகத்தில் அரசியல் தொடர்பாடல்மீதான வெகுஜன ஊடகங்களின் தாக்கம் பெருமளவுக்கு அரசியல் மற்றும் பொருளாதாரச் சூழ்நிலை, பத்திரிகையாளர்களின் திறன்கள் மற்றும் அவர்களுக்கான பயிற்சி மற்றும் பொதுமக்களின் சமகால அரசியலின் உளப்பாங்குகள் என்பவற்றால் பெரிதும் தீர்மானிக்கப்படுகின்றது என்னும் ஊகத்தை அடிப்படையாகக்கொண்டதாகும். இக்கட்டுரை இத்துறையில் அ.சா.நிறுவனங்களின் செயற்பாடுகள்குறித்த ஒரு சுருக்கமான கலந்துரையாடல் மற்றும் ஐரோப்பிய மட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஜனநாயக நாடுகளிலும் மற்றும் இடைமாற்றக் காலத்தேசங்களிலும் செய்தி ஊடகங்களின் சீர்திருத்த முயற்சிகள் சம்பந்தமான ஒரு பிரேரணை என்பவற்றோடு நிறைவடைகின்றது.

***கிறிஸ்டீன் பிக்டன்*** மற்றும் ***பெனடிக்ட் கொர்ப்*** என்போர் சமாதானத்தைக் கட்டியெழுப்புதலில் கட்டமைப்பு அம்சங்கள்தொடர்பில் அபிவிருத்தி உதவியின் வகிபாகத்தை சுட்டிக்காட்டுகின்றனர். இக்கட்டுரை அபிவிருத்தி உதவித்துறையில் கோட்பாட்டு எடுகோள்கள் மற்றும் வலுவூட்டல் அணுகுமுறைகள்குறித்த நடைமுறை அனுபவங்கள் இரண்டையுமே ஆய்வு செய்கின்றது. அது மோதுகை மாற்று நிலையாக்கத்துக்கான அவற்றின் சாத்திய வளம்குறித்து விசேட கவனம் செலுத்துகின்றது. கட்டுரையாளர்கள் சமீபத்திய அபிவிருத்திக்கொள்கை சம்பந்தமான சொல்லாடல்களை மேலும் கட்டியெழுப்புவதோடு ஜனசமூக அபிவிருத்தித்துறையினுள் வலுவூட்டல் அணுகுமுறைகளையும் மீளாய்வு செய்கின்றனர். கட்டுரையாளர் பங்கேற்பு வலுவூட்டல் மற்றும் மோதுகை மாற்றுநிலையாக்கம் என்பவற்றுக்கிடையிலான இணைப்பு உறவுகளை மேலும் ஆய்வுக்குட்படுத்துதல், ஜனசமூகமட்டத்தில் பொதுவான பங்கேற்பு அணுகுமுறைகளில் சாத்தியவளம் மற்றும் உள்ளூர் மட்டத்தில் மோதுகை மாற்றுநிலையாகத்தில் அவற்றின் தாக்கம் என்பவைகுறித்த விமர்சன ரீதியான கருத்துவெளியிடுகின்றனர். தேடல்முடிவுகளுள் ஒன்று அபிவிருத்தி முகவர் நிலையங்கள் மிகவும் குறுகிய நடவடிக்கை எல்லையுள் செயற்படுகின்றன என்பதும், அவர்கள் பல்வேறு இருதலைப் பொறி நிலைகள் மற்றும் ஐயுறவு நிலைகளுக்கு முகங்கொடுக்க வேண்டும். என்பதும் மற்றும் இது அவற்றின் வெற்றிக்கு குந்தகமாக அமையக்கூடும் என்பதுமாகும். எப்படியாயினும், வலுவூட்டல் செயல்முறைகள் உள்ளூர் ஜனசமூக அபிவிருத்திக்குப் பங்களிப்புச்செய்து, குடிமக்கள் அனைவரையும் உள்ளடக்கும் செயல்முறைகளையும் முன்னேற்றுமாயின் அவை மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கு ஆதரவுவழங்குவது சாத்தியமாகும்.



இக்கைந்நூலின் ***ஐந்தாவது பகுதியில்*** மோதுகை மாற்றுநிலையாக்கம் என்பது போருக்குப்பிந்திய சூழ்நிலைகளிலும், போரினால் சிதைந்த சமூகங்களிலும் புனர்நிர்மாணம், புனர்வாழ்வு என்பவற்றுக்கான ஒரு சவாலாகவே வலியுறுத்தப்படுகின்றது.

***மார்ட்டினா பிஷரின்*** கட்டுரை போரினால் சிதைவடைந்த சமூகங்களில் புனர்நிர்மாணம், புனர்வாழ்வு மற்றும் மீளினைப்புப் போன்ற பிரச்சினைகள் சம்பந்தமான ஒரு மேலோட்டமான பார்வையை வழங்குகின்றது. போருக்குப் பிந்திய சூழ்நிலைகளின் சூழமைவில் புனர்நிர்மாணம் என்பது ஓர் ஐயப்பாடான அல்லது மோதுகையான எண்ணக்கருவாக மாற்றமடைகின்றது. சில செயற்பாட்டாளர்கள் இதைப் பயனுள்ளதென்று கருதுகின்றனர். ஏனையோர் சமூகம் புனர்நிர்மாணம் செய்யப்படலாம் அல்லது செய்யப்படவேண்டும் என்ற கருத்துக்களை ஏற்க மறுப்புத் தெரிவிக்கின்றனர். கட்டுரையாளார் அகதிகளினதும், இடம்பெயர்ந்த நபர்களினதும் மீளிணைப்பு மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கான பிரதான சவால் என்றும், முன்தேவையென்றும் வாதிடுகின்றார். வெளிவாரிச் செயற்பாட்டாளர்களின் ஆதரவும்இடையீடும் பல சந்தர்ப்பங்களிலும் வீடுகள் மற்றும் அகநிலையமைவுகள்குறித்த ஒரு புனர்நிர்மாணமாகவே மாறுகின்றது. அதேவேளையில் ஜனசமூகங்களை மீளவும் கட்டியெழுப்பவேண்டிய தேவைகுறித்து அனைவரும் மறந்துவிடுகின்றனர். புனர்நிர்மாணத்திலிருந்து ஆக்கபூர்வமான மோதுகை

மாற்றுநிலையாக்கத்தையும், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதையும் நோக்கிச்செல்வதாயின், அபிவிருத்தி அணுகுமுறைகள், பொருளாதாரக் கண்ணோட்டங்கள் மற்றும் சிவில்சமூகப் பிரச்சினைகள்சம்பந்தமாக உள்ளூர்ச் செயற்பாட்டாளர்களுக்கு வலுவூட்டுதல், சமாதானக் கல்வி மற்றும் சமூகப்பணி என்பவற்றை ஒன்றிணைக்கும் இணைந்த முயற்சிகள் போன்றவை அவசியமாகும். மூன்றாந்தரப்பு இடையீட்டைப் பயனுறுதியுள்ளதாக்குவதற்கு செயற்பாடுகளின் கூட்டிணைப்பு அவசியமாகும். போல்கன் நாடுகளிலிருந்து ஆக்கபூர்வமான மற்றும் எதிர்மறையான படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளமுடியும்.

***டேவிட் பெக்கர்*** வன்செயலின் விளைவுகளைக் கையாளுவதற்காக உளவியல் பரிமாணத்தில் தீர்வுகள்காணப்பட வேண்டிய பிரச்சினைகள்குறித்து இலத்தீன் அமெரிக்கா மற்றும் போல்கன் தேசங்களிலான அனுபவங்களூடாக விளக்கமளிக்கின்றார். இந்த அத்தியாயம் உள அதிர்ச்சிவடு சம்பந்தமான கோட்பாடுகளைக் கலந்துரையாடுவதோடு உள அதிர்ச்சி வடு எண்ணக்கருக்கள் தொடர்ச்சியாக மீண்டும் கண்டறியப்பட வேண்டுமென்றும், உள அதிர்ச்சிவடுக்கள் ஏற்படும் குறித்துரைப்பான அரசியல் மற்றும் பண்பாட்டு சூழமைவுகளுடன் அவை எப்பொழுதும் தொடர்புபடுத்தப்படவேண்டுமென்றும் வாதிடுகின்றார். உள அதிர்ச்சியின் உள்மன இயக்கவியலைப் பொறுத்தவரையில் சிதைவுறல் என்பது ஒரு நடுநாயகமான பண்பு என்றும், அதை, ஏற்பட்ட அழிவை அங்கீகரித்து ஏற்றுக்கொள்வதும், சங்கேதப்படுத்தல் ஏற்படக்கூடிய ஓர் அவகாச வாய்ப்புநிலையை உருவாக்க உதவுவதுமான ஒரு நெருக்கமான உறவுநிலையின் உள்ளேயே வெற்றிகொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. கட்டுரையாளர் உள அதிர்ச்சிச் சிகிச்சைப்பணி என்பது, நெருக்கடிப் பிராந்தியங்களிலான ஒன்றிணைக்கப்பட்ட அணுகுமுறையின் ஒரு பகுதியாக இருப்பதோடு, அது உளவியல், போதனை மற்றும் பொருளாதாரப் பரிமாணங்களையும் உள்ளடக்குவதாக இருத்தல் வேண்டுமென்றும் தெரிவிக்கின்றார்.



***குனார் தீஸ்ஸெனின்*** கட்டுரை ஆயுதப்போரின்பின்னர் அநீதிகளை விசாரணைசெய்து ஒழுங்கு முறைப்படுத்துவதுகுறித்த பல்வேறு அணுகுமுறைகளை ஆய்வுசெய்கின்றது. அது இணக்கசபைகள், ஜனசமூக நீதிமன்றங்கள் மற்றும் உண்மை அறியும் ஆணைக்குழுக்கள் என்பவற்றின் சாத்தியவளங்களையும், இடர்வரவுகளையும் மீளாய்வுசெய்கின்றது. மேலும் கட்டுரையாளர் பொதுமன்னிப்பு, இழப்பீடு மற்றும் சமூகத்தில் அடிமட்ட மக்களின் மீளிணக்கத்துக்கான முன்முயற்சிகள் என்பவை எவ்வாறு மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்குப் பங்களிப்புச்செய்யலாம் என்பதுகுறித்தும் கலந்துரையாடுகின்றார். அவர் இத்துறையிலுள்ள செயற்பாட்டாளர்கள், மாற்றமுறும் அதிகார உறவுகள் மற்றும் போரினால் சிதைவடைந்த சமூகங்களில் நடவடிக்கைக்கான மட்டுப்பாடான விருப்புத்தெரிவுகள்குறித்துக் கட்டாயம் அறிந்திருக்கவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார். இவ்வாறாக, பரிணமிக்கும் சர்வதேச குற்றவியல் சட்ட முறைமைகுறித்து நிலவும் தற்போதைய ஆர்வம் உளளூர் முன்முயற்சிகள் மற்றும் நிறுவனங்களிலிருந்து கவனத்தைத் திருப்பாதவகையில் அமைதல் வேண்டும். கடந்தகால அநீதிகளைக் கையாளுவதென்பது ஒரு நீண்டகால செயல்முறையாக மாற்றமடைகின்றது. எனவே ஒரு தலைமுறை காலத்தினுள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான விளக்கத்தையே பெற்றுக்கொள்ளமுடியும். மீளிணக்கம் என்பது மோதுகைக்குப் பிந்திய புனர்வாழ்வு சம்பந்தமான ஒரு சட்டநிலைத்தகவுள்ள இலட்சியமாக அமையலாம். ஆயினும் அதை முன்னாள் பகைவர்கள்மீது வலிந்து திணிக்கமுடியாது. கடந்தகால அட்டூழியங்கள் விசாரிக்கப்பட்டு, அநீதிகளுக்குப் பரிகாரங்கள் காணப்படாவிடின், பாதிப்புற்றோர் மீளிணக்கத்துக்கு வராதிருப்பதற்கு நல்ல காரணங்கள் உள்ளன.

***கெவின் கிலெமண்ட்ஸ்*** உறவிணைப்புக் கோட்பாடுகுறித்த சவால்கள், ஆய்வு மற்றும் நடைமுறை சம்பந்தமாக மேலும் விபரமாக உரையாடுவதோடு, சமூகமாற்றத்தின் இயைபுற்ற சகல விடயப்பரப்புகளிலும் இந்த அணுகுமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்களை

முன்வைக்கின்றார். இந்த அத்தியாயம் ஆபிரிக்கா, காகசஸ் மற்றும் ஆசியாவில் இடையீடுகள்மூலம் பெற்றுக்கொண்ட சில படிப்பினைகளை விளக்குகின்றது. கட்டுரையாளர் மோதுகைக்கட்டமைப்பு மூலவளங்கள்-பிரத்தியேகமாக அரசியல் மற்றும் பொருளாதாரம் குறித்தவை- மோதுகைப் பகுப்பாய்விலும், இடையீட்டுச் செயல்முறைகள் வடிவமைப்பிலும் ஒப்பீட்டு ரீதியில் இன்னமும் அபிவிருத்தி அடையவில்லை என்றும் வாதிடுகின்றார். இதன் கருத்து மோதுகையிலான தடம் இரண்டு இடையீடுகளுட் பல சூழ்நிலை அல்லது கட்டமைப்பு மாற்றங்களைவிட உளப்பாங்கு மற்றும் நடத்தை மாற்றங்களை நோக்கியே திசைமுகப்படுத்தப்பட்டுள்ளன என்பதாகும். இச்சூழ்நிலை மறுபுறந்திருப்பப்பட்டு நிறுவனங்கள் மற்றும் செயல்முறைகளின் மாற்றுநிலையாக்கம் சம்பந்தமாக கூடுதலான கவனம் செலுத்தப்படாத வரையில் ஸ்திரமான சமாதான உறவுகளை ஏற்படுத்துவது கடினமாகும்.

*பேர்கோ.்.வ் கைந்நூலின் முதலாவது பதிப்புக்கான* விடயதானங்கள் பதிப்பாசிரியர் குழாம் மனதில் கொண்டிருந்த ஆரம்பக் கருப்பொருட்களைக் கையாளுகின்றன. எப்படியாயினும், இப்பாகம் தெரிவுசெய்யப்பட்ட பிரச்சினைகள் மற்றும் தலைப்புகளை வழங்குகின்றது. பல முக்கியமான வினாக்கள் மேலதிக விவாதம் மற்றும் மேலும் ஆழமான ஆய்வு என்பவற்றுக்காகக் காத்திருக்க வேண்டும். பல சவால்கள் இன்னமும் எஞ்சியுள்ளன.

- மோதுகை தொடர்பான சொல்லாடலில் எழும் முதலாவது சவால் மோதுகை மாற்றுநிலையாக்கம் குறித்த மேற்குலக அடிப்படையிலான அணுகுமுறைகள் மேற்குலகம் அல்லாத சூழமைவுகளில் எவ்வளவு தூரத்துக்குப் பொருந்தக்கூடியன என்பதாகும். இது சம்பந்தமான விவாதம் இன்னும் தொடரும் ஒன்றாகவுள்ளது. ஆயினும், இது ஆரம்பத்திலிருந்ததைவிட மேலும் கூடுதலான அளவில் வித்தியாசமான ஒன்றாகவுள்ளது. நீண்டகாலச் சமூக மோதுகைகள் மேலெழுந்தமை பெருமளவுக்கு அரசு சம்பந்தமான மேற்குலக எண்ணக்கருவின் உலகமயமாக்கத்தோடு இணைப்புற்ற ஒன்று என்பதும், அதன் சீர்திருத்தம் அதன் பண்பாட்டு உருவாக்கத்தை மனதில்கொள்ளவேண்டும் என்பதும் தெளிவாகியது. அத்தோடு மோதுகையைக் கையாளும் பல மரபுரீதியான வடிவங்கள் பயனுறுதியுள்ள மாற்றுநிலையாக்கத்துக்கான வாய்ப்புகளைக் கணிசமான அளவுக்குச் செழுமைப்படுத்தி, அதிகரிக்கும் என்பதும் தெரியவந்தது. ஆயினும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளில் பண்பாட்டு பல்லினப்பாங்கிற்கான மதிப்பை ஏனைய சமூக மற்றும் பால்நிலை சமத்துவம் குறித்த பெறுமானங்களோடு எவ்வாறு சமநிலைப்படுத்துவது என்னும் கேள்வி எஞ்சியுள்ளது.
- மோதுகை மாற்றுநிலையாககத்தின் ***பால்நிலை வகிபாகங்களின் முக்கியத்துவத்தை*** ஆய்வு செய்வதற்கும், ***பால்நிலை ஒப்புரவை*** ஈட்டிக் கொள்வதற்கும் மேலும் பூரணமான பகுப்பாய்வும், சிந்தனையும்அவசியப்படுகின்றன. டயானா பிரான்சிஸ் தனது அத்தியாயத்தில் சுட்டிக்காட்டியுள்ளவாறு பால்நிலைப் பரிமாணம், பண்பாட்டு பல்லினப் பாங்கு மற்றும் அதிகாரச் சமநிலையின்மைகளுடன் நெருக்கமாக இணைப்புற்ற ஒன்றாகும். உதாரணமாக, இச்சூழமைவில் முக்கியமான வினாக்கள் தீர்மானம் மேற்கொள்வதில் ஆண்கள் ஏறத்தாள ஓர் ஏகபோகத்தை வகிக்கும் ஆழமாகப் பிளவுற்ற, துருவப்படுத்தப்பட்ட சமூகங்களில் "பால்நிலைப் பெரும்போக்கு" குறித்த நடைமுறைப்படிகளை நோக்கி நகருவது எவ்வாறு என்பதுபோன்ற விடயங்களை உள்ளடக்குகின்றன. அத்தோடு போர்க்காலங்களில் அவலகரமாக தாம் தலைவர்களாக வேண்டியேற்பட்ட குடும்பங்களின் உயிர்வாழ்வை உதிப்படுத்தவேண்டிய நிலையில் பெண்கள் இருந்த காலகட்டத்தில் அவர்கள் ஏற்றுக்கொண்ட புதிய மற்றும் துடிப்பான வகிபாகங்களின் சாத்திய வளங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்னும் கேள்வியும் இதனுள் அடங்கியுள்ளது. அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகளைப் பொறுத்தவரையில் பெண்களின் சட்ட, மற்றும் மனித உரிமைகளைப் பொறுத்தவரையில் பெண்களின் சட்ட மற்றும் சமூக சமத்துவம், அரசியல் செயல்முறையில் அவர்களின் பங்கேற்பு மற்றும் சிவில் சமூகத்தில், அவர்களின் தன்னம்பிக்கை மிக்க ஈடுபாடு என்பவற்றுக்கு கவனம் செலுத்தப்பட

வேண்டியது முக்கியமானதாகும். ஆயினும், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதால் பால்நிலை உணர்திறனை அதிகரிக்கும் பணி இந்த நோக்கத்துக்கும் அப்பால் செல்ல வேண்டியுள்ளதுடன், அது முழுக்கமுழுக்க வன்செயலினாலும் (யுத்தத்தினாலும்) பாதிக்கப்பட்டோர் என்ற வகையிலோ அல்லது செயற்பாட்டாளர் என்ற வகையிலோ பெண்களின் குறித்துரைத்த சூழ்நிலையிலோ அல்லது வகிபாகத்திலோ கவனம்செலுத்தமுடியாது. அது பெண்களினதும், ஆண்களினதும் அடையாளம் குறித்த வினாக்கள், ஆண்மை மற்றும் பெண்மைகுறித்த சமூகக்கருத்துக்கள் எந்த அளவுக்கு மோதுகைகளின்போது வன்செயலுக்குப் பங்களிப்புச்செய்கின்றன மற்றும் இக்கருத்துக்களையும், அவற்றின் குறியீட்டு முக்கியத்துவததையும் மாற்றியமைத்து வன்செயல் பண்பாடுகளை இல்லாதொழிப்பதற்கு என்ன செய்யலாம் என்பனபோன்ற விடயங்களிலும் கவனம் செலுத்துதல்வேண்டும். மோதலுக்குப் பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டுள்ள அமைப்புகள் எதிர்நோக்கும் ஓர் உண்மையான சவால் பால்நிலைத் தாக்கமதிப்பீட்டுக்கான ஒரு வீச்சான கருவிகளை மேம்படுத்துவதும், இராணுவமயப்படுத்தப்பட்ட ஆண்மைகுறித்த அடையாளப்பாங்குகளை வலுப்படுத்துதல் தொடர்பில் அளவுகோல்களை விஸ்தாரமாகக் கூறுவதுமாகும். இப்பாங்குகளை மேவிச்செல்லும் செய்திட்டங்களை அபிவிருத்திசெய்வதற்கான முறைகளை இனங்காணுவது இச்சூழமைவில் ஒரு முக்கியமான பிரச்சினையாகும்.

- போல் கொலியர், டேவிட் மலோன் மற்றும் ஏனையோர் "பேராசை மற்றும் மனக்குறை" சம்பந்தமான விவாதத்தை ஆரம்பித்தபோதும், அரசியல் வன்செயலுக்குப் பின்னாலுள்ள பொருளாதார நோக்கங்களை வலியுறுத்தியபோதும் "நீண்டகால சமூக மோதுகைகள்" குறித்த எண்ணக்கருவுக்கு சவால் விடுக்கப்பட்டது. பல மோதுகைகளில் வன்செயல் வெடிக்கக் காரணமாயமைவது ஓரங்கட்டப்பட்ட குழுக்களின் சட்டநிலைத்தகவுள்ள அரசியல் மனக்குறைகளல்லவென்றும், அதற்குப்பதிலாக பிளவுண்ட சலுகைபெற்ற வர்க்கங்களின் உபாயங்கள் மற்றும் கணிப்பீடுகளே உண்மையான காரணங்களென்றும் அவர்கள் வாதிட்டனர். இந்த விவாதம் ***சிவில் யுத்தங்களின் அரசியல் பொருளாதாரம்*** குறித்த மேலதிக கவனத்தைத் திருப்பியுள்ளதுடன், பொருளாதாரக் காரணிகளுக்கும், உள்நாட்டு மோதுகைகள் தீவிரமாகப் பரவுதல் மற்றும் தீவிரங்குறைதல் என்பவற்றுக்கிடையிலான உறவிணைப்புகள்குறித்து பல சிந்தனையைத்தூண்டும் வினாக்களுக்கும் இட்டுச் சென்றுள்ளது.

- மேலுமொரு சமீபத்திய அபிவிருத்தி அரசுகளுக்குள் இடம்பெறும் மோதுகைளின் ***பாதுகாப்புப் பரிமாணத்தின்மீது*** ஏற்பட்டுள்ள புத்துயிராக்கம் பெற்ற அக்கறையாகும். சிறிதுகாலமாக ஆயுதவிற்பனை, இராணுவ உதவி மற்றும் ஒத்துழைப்புகள், இராணுவ மற்றும் பொலீஸ் ஆட்சிக்குழுக்கள்குறித்த பகுப்பாய்வு மோதுகை மாற்றுநிலையாக்கம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் போன்ற பிரச்சினைகளிலிருந்து ஓரளவுக்கு ஓரங்கட்டப்பட்டிருந்தது. அந்த நிலைமை தற்போது கணிசமான அளவுக்கு மாற்றமடைந்துள்ளது. இப்பொழுது நம்பிக்கை மற்றும் இடர்நிலையின்மையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் (CSBMs), இடர்நிலையின்மைத் துறையில் சீர்திருத்தங்கள் (SSR) மற்றும் இத்தகையஏனைய நடவடிக்கைகள் மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கு ஆதரவளிக்கும் செயல்முறைகளின் இன்றியமையாத தேவைப்பொருட்களாகலாம் என்பதுகுறித்த கருத்தொருமிப்பு பரிணமித்து வருகின்றது.

- அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் வன்செயல் மோதுகைப் பிரதேசங்களில் நிகழ்வதன் சாத்தியக்கூறு மிகவும் அதிகமாகவுள்ளது, என்னும் அனுபவத்தின் அடிப்படையில், மோதுகைத்தீர்வுக்கும், மாற்றுநிலையாகத்துக்குமான தேவை ஆரம்பகாலத்தில், வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டது. ***மனிதஉரிமைப் பணிகள்*** விடயப்பரப்பிலாகும். எப்படியாயினும், மனித உரிமைகளுக்கும் மோதுகை மாற்றுநிலையாக்கப் பணிக்குமிடையில் சில தெளிவான வேறுபாடுகள் நிலவுகின்றன.குறுந்தவணைக் காலப்பகுதியிலாவது அவற்றில் ஒன்றை முன்னேற்றுவது, மற்றதை

தன்னியக்கமாக முன்னேற்றுவதற்கு இட்டுச்செல்லாது விடலாம். சில மோதுகை பிராந்தியங்களில் இந்த இருபுடைத்தன்மை சமச்சீரற்ற மோதுகை மாற்றுநிலையாக்கத்தைக் கையாளும் இருவேறு அணுகுமுறைகளோடு தொடர்புற்றுள்ளது. முதலாவது சட்டநிலைத்தகவுகுறைந்த தரப்பு பேச்சுவார்த்தைச் செயல்முறையில் ஒரு சமபங்காளராகச்செயற்படும் அருகதையைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தும் “நிபந்தனைசார் அணுகுமுறை.” இரண்டாவது செயல்முறையின் கூட்டு உடைமை உணர்வையும், சமூகமாற்றத்துக்கான அதன் தாக்கத்தையும் உயர்வாக்கும்வகையில் சமஅந்தஸ்து, அங்கீகாரம் மற்றும் ஆக்கபூர்வமான சொல்லாடல் என்பவற்றை வலியுறுத்தும் “மாற்று நிலையாக்க அணுகுமுறை” ஆகும்.

- மோதுகை மாற்றுநிலையாக்கதினுள்ளும், சர்வதேச உறவுகளினுள்ளும் ஆராய்ச்சி மற்றும் நடைமுறை சம்பந்தமான ஒரு பொதுவான விடயப்பரப்பு ***சமாதான செயல்முறைகளின்*** கட்டுமானம் மற்றும் இயக்கவியல் ஆகும். ஓர் ஆரம்ப தற்காலிக சமாதான உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தும் செயல்முறைகள் வரையிலான காலம் நீண்டதாக அமைகையில், இத்தலைப்பு மேலும் சுவாரஸ்யமான ஒன்றாகின்றது. நீண்ட காலச் சமூகமே மோதுகைகளைத் தீர்ப்பதற்கான அனேகமான, சமாதானச்செயல்முறைகள் பல வருடகாலம் எடுப்பதோடு, அவை மீண்டும் மோதுகைகள் தீவிரமடைவது குறித்த தடைகள் மற்றும் தீர்மானகரமான படிநிலைகளைக்கொண்டதாக விளங்குகின்றன. இது செயற்படுத்துநர்கள் “பல படிகள்” “பல பிரச்சினைகள்” மற்றும் “பல்-தட” அணுகுமுறைகளுக்கு ஏற்றவகையிலான “பாதை வரைபடங்கள்” மற்றும் ஏனைய மாதிரி உருவாக்கச் செயல்முறைகளுக்குப் பங்களிப்புச்செய்வதற்கான ஊக்கத்தை வழங்கியுள்ளது.
- இறுதியாக, மோதுகை மாற்றுநிலையாக்கத்தை உலகமயமான நிகழ்வுகள்குறித்த போக்குகள் மற்றும் பிணக்குகளிலிருந்து வேறுபட்ட ஒன்றாக நோக்குதல் இயலாது. மிகவும் முக்கியமான பிரிவினைக்கோடு 2001 செப்டம்பர் 11ந் திகதி ஏற்பட்டதென்பது பிரத்தியட்சமானதாகும். இதன்பின்னர் இளையவரான ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் தலைமையிலான அமெரிக்க ஐக்கிய இராச்சிய அரசாங்கம் ஒரு புதிய, வல்லாதிக்க ரீதியான உலக அமைப்பை ஏற்படுத்தி, பல்தரப்புவாதம் மற்றும் பிணக்குகளின் சமாதானத்தீர்வுகளின் அடிப்படையை கேள்விக்குட்படுத்த முனைகின்றது. மோதுகை மாற்றுநிலையாக்கத்தின் எதிர்காலம் இதனால் எவ்வகையில் பாதிப்புறும்? இந்த அணுகுமுறைகளும், எண்ணக்கருக்களும், வழிமுறைகளும், நடைமுறைகளும் பரிணமிக்கும் வல்லாதிக்கப் புரட்சியுள் ஒன்றிணைக்கப்படுமா, அல்லது அவை மோதுகைகளை நாகரீகமயப்படுத்தும் வழிகளை ஏற்படுத்துவதில் இரண்டாம் உலகயுத்த இறுதியில் நிலைநாட்டப்பெற்ற சாதனைகளை மதித்து முன்னெடுக்கும்விடயத்தில் பங்களிப்பாற்றக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளனவா?



பேர்கோ∴வ் கைந்நூலின் எதிர்காலப்பதிப்புகளில் ஏனையவற்றோடு, இப்பிரச்சினைகுறித்தும் கவனஞ் செலுத்தப்படும். முன்னர் இடம்பெற்றதுபோலவே எதிர்காலப்பதிப்புகளும் ஓர் இரட்டைத் தட நடவடிக்கை முறையில் அபிவிருத்தி செய்யப்படும். கட்டுரைகள் முதலில் வெப்தளத்தில் வெளியிடப்படும் ***இரண்டாவதாக அவை பேர்கோ∴வ் கைந்நூல் சொல்லாடல் தொடரில்*** வெளியிடப்படும். ஆர்வமும், மீளூட்டலும் தொடருமென்று நம்புவதோடு, மீளூட்டலை வழங்குமாறும், அத்துடன் அல்லது எதிர்காலத்தில் இடம்பெறும் கலந்துரையாடல்களில் பங்குபற்றுமாறும் சகபணியாளர்களுக்கும், வாசகர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.